# ஆயர் குலத்தில் பிறந்த.



ஆயர்குலத்தில் பிறந்த கண்ணனை நம்பாதே ,

மாயங்கள் பல செய்தே அழச்செய்வானவன் !

ஆயர்குலத்தில்.....

பேதைப்பெண்ணொருத்தியை, அணைத்து ,

முத்தமிடும்போது அவளும் கண்மயங்கிட ;

ராதையைக் கொஞ்சியே மகிழ்ந்திடுவான் - பின்பு ,

சத்தமின்றி அவளையும் விட்டுவிடுவான் !

ஆயர்குலத்தில்.....

வாய்நிறைய வெண்ணை உண்டானென்று ,

அன்னையிடம் சென்று நீயும் சொன்னால் ;

வாய்திறந்து அதில்விண்ணைக் காட்டியே - பின்பு ,

உன்னை மயக்கமுறச் செய்தே மகிழ்வான் !

ஆயர்குலத்தில்.......

திரும்பும் இடமெல்லாம் காட்சிதந்திடுவான் ,

கரும்புபோல் பேசி நம்மை மயக்கிடுவான் ,

குறும்புகள் நானும் பொறுக்கமுடியாமலே - பின்பு ,

இரும்பாக்கிக் கொண்டேன் என் மனதினை !

ஆயர்குலத்தில்........